செ.வெ.எண்: 17/மார்ச் நாள்: 08.03.2016

# இராமநாதபுரம் மாவட்டத்தில்

# 2016-ஆம் ஆண்டு சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு வாக்காளர் விழிப்புணர்வு பணிகள்

# மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் இன்று (08.03.2016) சுகாதாரத் துறையின் சார்பாக மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், செவிலியர்கள் கலந்து கொண்ட வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை துவக்கி வைத்து பங்கேற்றார்.

2016-ஆம் ஆண்டு சட்டமன்ற பொதுத் தேர்தல் நாள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இராமநாதபுரம் மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தேர்தல் முன்னேற்பாடு பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் வாக்களிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி நூறு சதவீத வாக்குப்பதிவினை எய்திடும் வகையில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்களின் உத்தரவின் அடிப்படையில் அரசுத் துறைகளின் மூலம் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுகாதாரத் துறையின் சார்பாக இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனை வளாகத்திலிருந்து செவிலியிர்கள் பங்கேற்ற வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து பங்கேற்றார்.

இப்பேரணியில் 75-ற்கும் மேற்பட்ட செவிலியர்கள் கலந்து கொண்டு வாக்காளர் விழிப்புணர்வு குறித்த வாசகங்கள் அடங்கிய பதாதைகளை கையில் ஏந்தியபடி பேரணியாக சென்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இப்பேரணியானது இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனை வளாகத்திலிருந்து தொடங்கி பஜார் வழியாக ரோமன் சர்ச் வரை சென்று மீண்டும் அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் நிறைவடைந்தது.

அதன் பின்பு மாவட்ட மகளிர் திட்ட அலுவலகம் சார்பாக திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம், உத்தரவை மற்றும் குயவன்குடி ஊராட்சியில் உள்ள சாத்தான்குளம் ஆகிய கிராமங்களில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஊர் பொதுமக்கள் அனைவரும் வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழியினை எடுத்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சிகளில் இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) மரு.சகாய ஸ்டீபன்ராஜ், மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திரு.ஜெயராமன், இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.கிருஷ்ணமூர்த்தி, மண்டல மருத்துவ அலுவலர் மரு.விநாயகமூர்த்தி, அரசு செவிலியர் பள்ளி முதல்வர் திருமதி.இந்திராணி, இராமநாதபுரம் வட்டாட்சியர் திரு.மாரி உட்பட செவிலியர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**